தமிழ்நாடு அரசு, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை மிசன் வத்சால்யா குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் கீழ்கண்ட பட்டியலில் உள்ள பணியிடத்தினை தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்திட புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை | ஒப்பந்த ஊதியம் மாதத்திற்கு |
|---|---|---|---|
| 01. | பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சாரா) | 1 | ரூ.27,804/- |
| 02. | சமூகப்பணியாளர் | 2 | ரூ.18,536/- |

**பாதுகாப்பு அலுவலர் பணிக்கான கல்வித்தகுதி மற்றும் பணி முன் அனுபவவிபரம்**

- சமூக பணி/ சமூகவியல்/குழந்தை வளர்ச்சி/மனித உரிமை பொது நிர்வாகம்/ உளவியல்/மனநலம்/சட்டம்/பொதுசுகாதாரம்/சமூக வள மேலாண்மை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் முதுகலை பட்டம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் பெற்றிருக்க வேண்டும். அல்லது சமூக பணி/ சமூகவியல்/குழந்தை வளர்ச்சி/மனித உரிமை பொது நிர்வாகம்/ உளவியல்/மனநலம்/சட்டம்/பொதுசுகாதாரம்/சமூக வள மேலாண்மை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் இளங்கலை பட்டம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் பெற்றிருக்க வேண்டும். மேலும் திட்ட உருவாக்கம் /சமூக நலம்/பெண்கள் மற்றும் குழந்தை வளர்ச்சியில் செயல்பாடுகள், கண்காணிப்பு, மேற்பார்வை ஆகியவற்றில் இரண்டு வருட பணி முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- கணினியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- 42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்

**சமூகப்பணியாளர் பணிக்கான கல்வித்தகுதி மற்றும் பனிமுன் அனுபவவிபரம்**

- சமூக பணி/ சமூகவியல்/ சமூக அறிவியல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் இளங்கலை பட்டம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் பெற்றிருக்க வேண்டும்.
- பணி முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- கணினியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- 42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்

மேற்குறிப்பிட்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் https://pudukkottai.nic.in/ என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தினை அனைத்து கல்வி சான்றிதழ்களின் நகல்களுடன் இணைத்து நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 05.02.2025 அன்று மாலை 5.30 மணிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு கிடைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,**
**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம்,**
**மாவட்ட முன்னாள் படைவீரர்கள் நல அலுவலக வளாகம்,**
**கல்யாணராமபுரம் 1-ஆம் வீதி,**
**திருக்கோகர்ணம் அஞ்சல்,**
**புதுக்கோட்டை - 622002.**
**தொலைபேசி எண்: 04322-221266**

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**புதுக்கோட்டை.**